மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, எவ்வளவு ஏக்கர் என்ற கணக்கு தற்போது என்னிடம் இல்லை. கிட்டத்தட்ட 18 ஆயிரம் ஏக்கர் வேண்டுமென்று முடிவு செய்து நோட்டிபை செய்திருக்கிறோம். இதில் பல பேர்களுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. இந்தத் திட்டத்திற்குத் தங்களுடைய நிலங்களைத் தருவதற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். நமது பிரதம மந்திரி அவர்கள் சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தொடங்கி வைத்த காலையில் சிலர் தாங்களாகவே முன்வந்து, தங்களுடைய நிலங்களைக் கொடுக்க முன்வந்து தந்தார்கள். அதேபோல எல்லா மக்களும் தருவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்கூறும்போது, வட ஆர்க்காடு மாவட்டத்திலே இரும்புக் கனி படிவங்கள் இருப்பதாகச் சொன்னார். அது பூர்வாங்கமாக ஆராய்ச்சி செய்யப்பட்டதா? அப்படியானால், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேறு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு, மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, 'சேலம் உருக்காலை உங்களுடைய ஆட்சியில் வந்துவிட்டது. இன்னொரு ஆலையும் உங்களால்தான் கொண்டுவர முடியும்' என்கிறார் கனம் அங்கத்தினர் அவர்கள். அதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

*** 71 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968, 1969-ம் ஆண்டுகளில் தூத்துக்குடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தூத்துக்குடியில் பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் சாத்தியக் கூறுபற்றிய அறிக்கையினை தயார் செய்யும்படி டாடா கன்சல்டிங் எஞ்சினீயர்ஸ் என்னும் நிறுவனத்தை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்தபின் அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு முறைப்படி மனுச்செய்யும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுக வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால் அந்தத் துறைமுகப் பணிகளுக்கு பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையும் இன்றியமையாததாக இருப்பதனால் அதை விரைவில் துவக்க அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிக்க நம்பிக்கை கொண்டவர்கள் எல்லாம் சேர்ந்து 1967-ஆம் வருடம் தூத்துக்குடி துறைமுகப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு எழுச்சிநாள் கொண்டாடினுர்கள். அதன் காரணமாக எழுச்சிமிக்க வரலாறு அங்கே உருவாகிக்கொண்டிருக் கிறது. அந்த எழுச்சிமிக்க வரலாற்ருேடு பெட்ரோலியம் எண்ணெ சுத்திகரிப்பு ஆலேயும் வந்துவிடும் என்று நம்புகிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : கப்பலுக்கு எரிபொருள் போடு கிற ஒரு துறைமுகமாக தூத்துக்குடி அமைக்கப்படுகிற உத்தேசம் இருக்கிறதா ? அப்படியாஞல் பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலேயும் அங்கே அமையவேண்டியது அத்தியாவசியம் என்பதை உணர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொள்வாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதை உணர்ந்த காரணத்தி ஞல்தான் நம் அரசாங்கமே அதனுடைய தேவையை வலியுறுத்தி அது சம்பந்தமான புள்ளி விவரங்களேச் சேகரிக்க முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இதைச் சேகரித்தவுடன் மத்திய அரசிடம் எடுத்துக்கூறி அதனேப் பெற முயற்சி செய்யும்.

திரு. கே. என். குமாரசுவாமி : தூத்துக்குடிப் பகுதியில் உள்ள எழுச்சிமிக்கவர்கள் அங்கே பல தொழில்களேத் துவக்க முன் வந்திருக்கிருர்களே, அவர்களுக்கு எந்த எந்தத் துறையில் ஆதரவு அளிக்க இந்த அரசாங்கம் முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தூத்துக்குடியைச் சுற்றி சால்ட் பேஸ்டு ஆக இருக்கக்கூடிய ரசாயனப் பொருள்களே உற்பத்தி செய்யும் தொழிற்சாலேகளேப் பெருக்க முயற்சி செய்ய வேண்டி யிருக்கிறது. உரத் தொழிற்சாலேயையொட்டியும் ஏராளமான தொழில்கள் வரவேண்டுமென்று முயற்சி செய்கிருேம். எந்தத் தொழிலே துவக்குவதற்கு யார் முன்வந்தாலும் அரசு ஆதரவு அளிக்கும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தூத்துக்குடி எண்ணெ சுத்திக ரிப்புத் தொழிற்சாலே எவ்வளவு மூலதனத்தில் துவக்கப்படுவதாக இருக்கிறது ? அது எந்தத் துறையில் ஆரம்பிக்கப்படுவதாக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அந்த ஆலேயை நிறுவும் சாத்தியக்கூறு பற்றிய அறிக்கையினேத் தயார் செய்யும் படி டாடா கன்சல்டிங் எஞ்சினீயர்ஸ் என்னும் நிறுவனத்தை அரசாங்கம் கேட்டுக்கொள்ள முடிவு செய்திருக்கிறது. அவர் களுடைய ஃபீஸிபிலிடி ரிப்போர்ட் வந்த பிறகு எந்த வகையில் எவ்வளவு மூலதனத்தோடு, எந்தத் துறையில் துவங்கலாம் என்பது பற்றி ஆராயப்படும்.